செ.வெ.எண்: 582 நாள்: 11.10.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**

**சுதந்திர இந்தியாவின் 75வது ஆண்டை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

---

சுதந்திர இந்தியாவின் 75வது ஆண்டை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கிடையே நடத்தப்பட்ட ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் இன்று (11.10.2021) வழங்கினார்.

சுதந்திர இந்தியாவின் 75வது ஆண்டை முன்னிட்டு, புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகம் மற்றும் புதுக்கோட்டை சுபலெக்ஸ் கலை வளர்ச்சி மையம் சார்பில் புதுக்கோட்டை நகரில் உள்ள பள்ளி மாணவ, மாணவியர்களுக்காக ஓவியப் போட்டி நடைபெற்றது.

முதல் பிரிவில் "இந்திய சுதந்திரப் போராட்ட நிகழ்வுகள்" என்ற தலைப்பில் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளுக்கிடையே நடைபெற்ற ஓவியப் போட்டியில், முதல் பரிசு ஏ.மேனகாஸ்ரீ 7ஆம் வகுப்பு திரு இருதய பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இரண்டாம் பரிசு ஜெ.நிலோபர் இன்பன்ட்மேரி 8ஆம் வகுப்பு எஸ்.எப்.எஸ். மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, மூன்றாம் பரிசு ஆர்.யாழினி 8ஆம் வகுப்பு ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஆகியோருக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களையும்,

சான்றிதழுடன் கூடிய ஆறுதல் பரிசு எம்.அப்துல் ரகுமான் 6ஆம் வகுப்பு நேரு மெட்ரிக் பள்ளி, ர.சபிதா, 7ஆம் வகுப்பு திரு இருதய பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பி.கிருபாகரன், 6ஆம் வகுப்பு வைரம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஆகியோருக்கும் பரிசு மற்றும் சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

மேலும் இரண்டாம் பிரிவில் "உப்பு சத்தியாகிரகம்" என்ற தலைப்பில் 9 மற்றும் 10ஆம் வகுப்புகளுக்கிடையே நடைபெற்ற ஓவியப் போட்டியில் முதல் பரிசு கே.சரவணன் 10ஆம் வகுப்பு T.E.L.C. மேல்நிலைப்பள்ளி, இரண்டாம் பரிசு சை.ரஜினாஷ்ப்ரின், 10ஆம் வகுப்பு ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, மூன்றாம் பரிசு கே.தினேஸ்குமார் 9ஆம் வகுப்பு அருள்மிகு பிரகதாம்பாள் அரசு மேல்நிலைப்பள்ளி ஆகியோருக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களையும்,

சான்றிதழ்களுடன் கூடிய ஆறுதல் பரிசு ஏ.கீர்த்திகிரேஸி 10ஆம் வகுப்பு திரு இருதய பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஜெ.தேவதர்ஷினி 9ஆம் வகுப்பு திரு இருதய பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ர.அப்துல்ரகுமான் 10ஆம் வகுப்பு ஸமஸ்கிருத வித்யாலயா ஓரியண்டல் உயர்நிலைப்பள்ளி ஆகியோருக்கும் பரிசு மற்றும் சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் புதுக்கோட்டை அரசு அருங்காட்சியக காப்பாட்சியர் (பொ) டி.பக்கிரிசாமி மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---------------------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**